## வீடுகளுக்கான மின்கட்டணம் உயர்த்தப்படாது!

# அரசின் இலவச மின்சாரத் திட்டங்கள் தொடரும்!

### திருச்சி பேட்டியில் முதல்வர் உறுதி!...

முதல் பக்கத் தொடர்ச்சி

**கேள்வி:** *கவர்னரை மாற்றுவதற்கு ஏதாவது கோரிக்கை வைப்பீர்களா?*

**முதலமைச்சர்:** நாங்கள் நினைப்பது எல்லாம் நடந்தால் இந்தப் பிரச்சினையே இல்லை.

**பல்கலைக் கழகத்திற்கு தமிழினத் தலைவர் கலைஞர் பெயர்!**

**கேள்வி:** *கலைஞருடைய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை பல்கலைக்கழகத்திற்கு கலைஞர் அவர்களின் பெயர் சூட்டப்படுமா?*

**முதலமைச்சர்:** நிச்சயமாக அது பரிசீலிக்கப்படும். இருக்கிற பல்கலைக்கழகத்திற்கு வைக்கலாமா அல்லது புதிதாக உருவாக்கப்படக்கூடிய பல்கலைக்கழகத்திற்கு வைக்கலாமா என்பதை நாங்கள் பரிசீலித்து முடிவு செய்வோம்.

**கேள்வி:** *தமிழ்நாட்டில் முக்கியமான பல்கலைக்கழகங்களில் 2 வருடங்களாக பட்டம் தராமல் இருக்கிறார்கள், அதற்கு முக்கியக் காரணம் கவர்னர்தான் என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்கிறதே?*

**முதலமைச்சர்:** ஏற்கனவே உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார், நானும் அதனை அழுத்தமாகச் சொல்கிறேன். உண்மைதான் அது.

**கேள்வி:** *விரைவாக அவர்கள் பட்டம் பெற நமது அரசு சார்பில் ஏதாவது முயற்சி செய்யப்படுமா ?*

**முதலமைச்சர்:** அதற்குதான் பல்கலைக் கழகத்தில் வேந்தர்களாக முதலமைச்சரே இருக்க வேண்டும் என்று நாங்கள் சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டிருக்கிறோம்.

**கேள்வி:** *டாஸ்மாக் கடைகளை குறைக்கும் எண்ணம் ஏதும் இருக்கிறதா?*

**முதலமைச்சர்:** ஏற்கனவே சொல்லியிருக்கிறோமே. இந்த ஆண்டு 500 கடைகளை குறைப்பதாக அறிவித்திருக்கிறோம்.

**கேள்வி:** *அமைச்சரவையில் மாற்றம் இருக்க வாய்ப்பிருக்கிறதா?*

**முதலமைச்சர்:** இப்போது வந்த செய்தியைப் பார்த்தீர்களென்றால், ஒன்றியத்தில் தான் அமைச்சரவை மாற்றம் வரும் என்று செய்தி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**கேள்வி:** *நீர்நிலைகளை நன்றாகத் தூர் வாரியிருக்கிறீர்கள், சில இடங்களில் கழிவு கலக்கிறது, அவற்றைச் சுத்தம் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா?*

**முதலமைச்சர்:** அதையும் கூடுமானவரை முயற்சி செய்து தடுத்துக் கொண்டிருக்கிறோம். ஏதேனும் புகார் இருந்தால் சொல்லுங்கள், அதையும் கவனிக்கிறோம்.

**கேள்வி:** *வணிக (Commercial) மின்கட்டணம் உயர்வினால் வணிகம் பாதிக்கப்படும் என்று ஒரு கருத்து இருக்கிறது, அதைக் குறைப்பதற்கு ...*

**முதலமைச்சர்:** அதுவும் ஒரே ஒரு பத்திரிகையில்தான் அதைப் பெரிதுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லோரும் அதைப் புரிந்து கொண்டார்கள். திட்டமிட்டு ஒரு பொய்ப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. வீட்டு இணைப்பைப் பொறுத்தவரை, அவர்களுக்கு மின்கட்டணத்தை எந்தக் காரணம் கொண்டும் உயர்த்த மாட்டோம் என்று உறுதியாகச் சொல்லிவிட்டோம். ஆனாலும் ஏற்கனவே அதே அறிவிக்கைதான் வந்திருக்கிறது. உங்களுக்குத் தெரியும், பார்த்திருப்பீர்கள். புள்ளிவிவரத்துடன் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

> **வீட்டு இணைப்பிற்கு எந்தவிதமான கட்டண உயர்வும் கிடையாது, அனைத்து இலவச இணைப்புகளும் தொடரும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அதேபோல வேளாண் இணைப்புகள், குடிசை இணைப்புகள் வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் என்பதும் தொடரும். கைத்தறி மற்றும் விசைத்தறிகளுக்கு அளிக்கப்படக்கூடிய இலவச மின்சாரச் சலுகைகளும் அப்படியே தொடரப் போகிறது. அதில் எந்தவித மாற்றமும் கிடையாது.**

வீட்டு இணைப்பிற்கு எந்தவிதமான கட்டண உயர்வும் கிடையாது, அனைத்து இலவச இணைப்புகளும் தொடரும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அதேபோல வேளாண் இணைப்புகள், குடிசை இணைப்புகள் வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் என்பதும் தொடரும். கைத்தறி மற்றும் விசைத்தறிகளுக்கு அளிக்கப்படக்கூடிய இலவச மின்சாரச் சலுகைகளும் அப்படியே தொடரப் போகிறது. அதில் எந்தவித மாற்றமும் கிடையாது.

ஒன்றிய அரசின் விதிமுறைப்படி பார்த்தீர்கள் என்றால், 4.7 விழுக்காடு கட்டணம் அதிகரிக்க வேண்டும். ஆனால், 2.18 விழுக்காடாக அதனைக் குறைத்து அந்தத் தொகையையும் மானியமாக தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டு மின்வாரியத்திற்குத் தருவதற்காக அரசு உத்தரவிட்டிருக்கிறது. எனவே வீட்டு இணைப்புகளைப் பொறுத்தவரைக்கும் எந்தவிதமான கட்டண உயர்வும் நிச்சயமாக இருக்காது.

வணிகம் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் அதுவும் 13 பைசாவிலிருந்து 21 பைசா வரை உயர்வு இருக்கும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம், அதில் எந்தவித மாற்றமும் கிடையாது. மற்ற மாநிலங்களில் பார்த்தீர்கள் என்றால், இதைவிட அதிகம். அ.தி.மு.க. ஆட்சி இருந்தபோது பார்த்தீர்கள் என்றால், மின் கட்டணத்தை செங்குத்தாக உயர்த்தினார்கள். மின்வாரியத்தை கடனில் மூழ்கடித்துவிட்டு போய்விட்டார்கள்.

அம்மையார் ஜெயலலிதா அவர்கள் மருத்துவமனையில் இருந்தபோது, உதய் (UDAY) திட்டத்தில் கையெழுத்திட்டது அ.தி.மு.க. ஆட்சி. அதனால்தான், இந்தக் கோளாறு எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. இதுதான் உண்மை.

**கேள்வி :** *அமுல் நிறுவனம் தமிழ்நாட்டில் வருவதை தடுப்பதாகச் சொன்னீர்கள். அது பற்றி தங்கள் கருத்து.. .*

**முதலமைச்சர்:** அதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

**கேள்வி :** *ஆவின் பாலில் கலப்படம் செய்கிறார்கள் என்று கூறுகிறார்களே?*

**முதலமைச்சர்:** அது தவறான செய்தி. அன்றைக்கே அந்தத் துறையினுடைய அமைச்சர் மறுத்துவிட்டார். திட்டமிட்டு பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆதாரத்தை போலியாகத் தயார் செய்து போடுகிறார்களே தவிர, அது உண்மை இல்லை.

**கேள்வி :** *நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. உங்களுடைய ஆயத்தப் பணிகளைத் தொடங்கிவிட்டீர்களா? புதிதாக ஏதாவது கூட்டணிக் கட்சிகள். நீங்கள் அதில் கலந்து கொள்ளப் போகிறீர்களா?*

**முதலமைச்சர்:** நான் தலைவருடைய நூற்றாண்டு விழாவில் தெளிவாக பேசியிருந்தேன். வருகிற 23-ஆம் தேதி பீகார் மாநிலத்தினுடைய முதலமைச்சர் நிதீஷ்குமார் அவர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார், அதில் முடிவெடுக்கப்படும். நான் அதில் கலந்து கொள்ளப்போகிறேன்.

**கேள்வி :** *மூன்று மருத்துவக் கல்லூரிகளின் அங்கீகாரம் ரத்து செய்தது ஒன்றிய அரசின் தலையீட்டினால்தான் ஆனது என்று அது பற்றி....*

**முதலமைச்சர்:** அதற்குரிய விளக்கத்தைச் சொல்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை டெல்லிக்கு அனுப்பி விளக்கம் சொல்லி, இப்போது மறுபடியும் மூன்று மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி கிடைத்திருக்கிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

---

# தமிழ்நாட்டில் ‘பைக் டாக்சி’க்கு அனுமதி இல்லை!

## போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அறிவிப்பு!

*கோவை, ஜூன் 11-*

தமிழ்நாட்டில் பைக் டாக்ஸிக்கு அனுமதி இல்லை என போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கோவையில் தெரிவித்தார்.

கோவை அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள்.விருப்ப ஓய்வு பெற்றவர்கள், இயற்கை எய்தியவர்களின் வாரிசுதாரார்கள் என மொத்தம் 518 பணியாளர்களுக்கு ரூ.145.58 கோடி பணப் பலன்களை வழங்கும் நிகழ்ச்சி கோவை மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக கோவை கிளை பணிமனையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், மின்சாரத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டு பணப் பலன்களை வழங்கினர்.

இதைத் தொடர்ந்து, கோவை மாநகரில் முதல்கட்டமாக 65 பேருந்துகளில் ஜி.பி.எஸ். மூலம் பேருந்து நிறுத்த ஒலி அறிவிப்புத் திட்டம் தொடங்கி வைத்தனர்.

இதைத் தொடர்ந்து, அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

கடந்த ஆட்சிக் காலத்தில் ஒரு ஓட்டுநர், நடத்துநர்கூட பணியமர்த்தப்படவில்லை. தற்போது ஓட்டுநர், நடத்துநர்களை பணியில் சேர்ப்பதற்கான ஆணைகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கியுள்ளார். அதன்படி, முதல்கட்டமாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநர், நடத்துநரை பணியில் சேர்ப்பதற்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் மற்ற அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் ஓட்டுநர், நடத்துநரை சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பஞ்சப்படி உயர்த்துவதுகுறித்து முதல்வரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும்.



2000 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்காக டெண்டர் விடும் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், கே.எம்.டபிள்யூ வங்கியின் நிதி உதவியுடன் 2,400 பேருந்துகள் வாங்குவதற்கு பணிகள் தொடங்கியுள்ளன. 4 முதல் 6 மாதங்களுக்குள் புதிய பேருந்துகள் இயக்கப்படும்.

பைக் டாக்ஸி குறித்து கேட்கிறீர்கள், பைக் என்பது தனி நபர் பயன்படுத்தக் கூடிய வாகனம். அது இன்னும் வாடகைக்கு விடப்படக்கூடிய வாகனமாக அங்கீகரிக்கப்படவில்லை. எனவே, தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை அதைப் பயன்படுத்தக் கூடாது. காவல் துறையும் பல்வேறு இடங்களில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு அமைச்சர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி மேயர் கல்பனா ஆனந்தகுமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அதன்பிறகு, கோவை சாய்பாபா கோயில் பகுதியில் உள்ள போக்குவரத்துப் பணிமனையில் இருந்து சிவானந்தா காலனி வரை பேருந்தில் அமைச்சர்கள் பயணம் மேற்கொண்டனர். ஒலி அறிவிப்பான் கருவி சரியான முறையில் இயங்குவது குறித்து பரிசோதித்தனர்.

---


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி4/1903/2023 **மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மறு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT Scheme) 2023-24**

| பணியின் விவரம் | சிப்பங்களின் எண்ணிக்கை | பணியின் மதிப்பு தோரயமாக (18% GST சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் - 8 & 9ல் உள்ள 22 எண்ணிக்கையிலான உட்புற தார் சாலைகள் மேம்படுத்தும் பணி (நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்) NSMT Scheme 2023-24 | 1 | 169.00 | 169000 | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **27.06.2023 மாலை 3.00 மணி**
ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **28.06.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 2941 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்


---

கோட்டூர் தெற்கு ஒன்றிய செயலாளர் வீ.எஸ். ஆர்.தேவதாஸ் ஏற்பாட்டில்

# 90 லட்சம் மதிப்பீட்டில் அரசுப் பள்ளிக்கு கட்டிடம்!

## ஏ.கே.எஸ். விஜயன் திறந்து வைத்தார்!

*திருவாரூர், ஜூன் 11-*

*திருவாரூர் மாவட்டம் கோட்டூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் வீ.எஸ்.ஆர். தேவதாஸ் ஏற்பாட்டில் பெருகவாழ்ந்தான் அரசு மேல்நிலை பள்ளிக்கு ரூ.90 லட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டிடம் கட்டி திறந்து வைக்கப்பட்டது.*

*கோட்டூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் வீ.எஸ்.ஆர்.தேவதாஸின் மூத்த சகோதரியின் மகன்கள் அன்பழகன், கோபாலர் ஆகியோரின் குடும்ப உறுப்பினர்கள் கல்வி மீது கொண்ட காதலால் கல்வியின் அவசியத்தை உணர்ந்து “தனசேகரி அம்மாள் அறிவரங்கம்” என்ற பெயரில் பெருகவாழ்ந்தான் அரசு மேல்நிலை பள்ளி வளாகத்தில் ரூபாய் 90 லட்சம் மதிப்பில் இந்த கட்டிடம் கட்டப்பட்டது.*

*இந்த கட்டிடத்தை தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியும் மாநில விவசாய அணி செயலாளருமான ஏ.கே.எஸ்.விஜயன், மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ, சட்ட மன்ற உறுப்பினர் கா.மாரிமுத்து ஆகியோர் ஒன்றியச் செயலாளர் வீ. எஸ். ஆர். தேவதாஸ் மற்றும் அன்பழகன், கோபாலர் ஆகியோர் முன்னிலையில் மாணவர்களின் பயன்பாட்டுக்கு அர்ப்பணித்தனர்.*

*நிகழ்வில் ஒன்றியக்குழு தலைவர் மணிமேகலை, மாவட்டக் கவுன்சிலர் கலைவாணி மோகன் மற்றும் அரசு அதிகாரிகள், கழக மூத்த முன்னோடிகள், பொதுமக்கள், மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.*

---

# மதுரை மாவட்ட திட்டக் குழு உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள்!

## மாவட்டச் செயலாளர்கள் பி.மூர்த்தி - கோ.தளபதி - மு.மணிமாறன் அறிவிப்பு!

மதுரை மாவட்டத்தில் நடைபெற உள்ள மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடும் தி.மு.கழக வேட்பாளர்கள் பட்டியல் வருமாறு:

**மதுரை மாவட்டம்:**

**ஊரகப் பகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள்:**

1. சி.நேருபாண்டியன், 2. ஆர். வடிவேல் முருகன், 3. ஜி.இராஜராஜன், 4. முத்துப்பாண்டி ஜெயசீலன், 5.ஏ.டி.ஆர். தங்கம், 6. எஸ்.செல்வமணி, 7. ஆர். காசிமாயன், 8. டி.முத்துராமன்

**பேரூராட்சி / நகராட்சி / மதுரை மாநகராட்சி உறுப்பினர்கள்:**

1.பி. பொன்வளவன் (எ) ராசா, 2. எஸ்.வி. சுதன், 3. திருமதி அமுதாதவமணி, 4.எஸ்.செங்கிஸ்கான், 5. டி.கதிரவன், 6. சுவேதா சத்யன், 7. ரம்ஜான் பேகம், 8. எஸ்.என். சத்யபிரகாஷ், 9. குமரவேல், 10. தமிழ்ச் செல்வி

| அமைச்சர் பி.மூர்த்தி | கோ.தளபதி | மு.மணிமாறன் |
|---|---|---|
| செயலாளர், | செயலாளர், | செயலாளர், |
| மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. | மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. | மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. |

---


தமிழ்நாடு அரசு
**திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை பேரூராட்சி**

**ந.க.எண்.495 / 2022/ அ1** **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** **நாள்.05.06.2023**

திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை பேரூராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டுக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் **Construction of LPG Gasifier Cremetorium at Ward No.1, Survey No.242 in Thirumazhisai Town Panchayat** பணிக்கு கீழ்கண்ட விவரப்படி மூடி முத்திரையிடப்பட்ட **Two Cover Systems 1)Technical Bid, 2)Price Bid** ஒரே உறையில் சீலிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 23-06-2023 ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று மாலை 3.00 மணி வரையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை 23-06-2023 ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று மாலை அலுவலக நேரப்படி பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 23-06-2023 ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 1.00 மணி வரையில் உரியக் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். அல்லது **https://tntenders.gov.in** இணையதளத்தில் பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளியினை 23-06-2023 ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை மட்டுமே பதிவேற்றம் செய்யலாம்.

| வ. எண் | பணியின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீடு தொகை (ரூபாய்) | டேவணித் தொகை 1 % | ஒப்பந்தப்புள்ளி படிவக் கட்டணம் | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | Construction of LPG Gasifier Cremetorium at Ward No.1, Survey No.242 in Thirumazhisai Town Panchayat under KNMT” Scheme 2022-2023 பணி | 1 | 1,50,00,000 | 1,50,000 | 21240 | 360 நாட்கள் |

இதர நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் வேலை நாட்களில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளும்படி தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ / 2913 / ஒப்பந்தப்புள்ளி /2023 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

செயல் அலுவலர், திருமழிசை பேரூராட்சி
திருவள்ளூர் மாவட்டம்



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி4/2753/2023 **மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (2023-24)**

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோரயமாக 18% GST சேர்த்து ரூ.இலட்சங்களில் | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் - 2, 4, 5, 8, 11, 13, 14 & 15ல் உள்ள 309 எண்ணிக்கையிலான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மேம்படுத்தும் பணி நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (2023-24) | 1 முதல் 33 வரை | குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.78.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.134.00 இலட்சங்கள் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு |

1. ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **27.06.2023 மாலை 3.00 மணி**
2. ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
3. இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **28.06.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 2944 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்


---



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், வைப்பர் ஊராட்சி, ஸ்ரீவைகுண்ட பெருமாள்புரம் சூரங்குடி இடையே முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.48.164லட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணியை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் முனியசக்தி ராமச்சந்திரன், விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சின்னமாரிமுத்து, விளாத்திகுளம் மத்திய ஒன்றியச் செயலாளர் ராமசுப்பு, விளாத்திகுளம் மேற்கு ஒன்றியச் செயலாளர் அன்புராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துக்குமார், ஊராட்சி மன்றத் தலைவர் சக்கம்மாள்ராமர், தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மகேந்திரன், மாவட்டப் பிரதிநிதி ராமலிங்கம், விளாத்திகுளம் கிழக்கு ஆதித்தன், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி சமூக வலைதள பொறுப்பாளர் ஸ்ரீதர் உட்பட கிராம பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

# சிவகங்கை தெப்பக்குளத்தை தூய்மைப்படுத்தும் பணி!

## நகர்மன்றத் தலைவர் துரைஆனந்த் துவக்கி வைத்தார்!

*சிவகங்கை, ஜூன் 11-*

*சிவகங்கை நகரின் மையப் பகுதியில் மிகவும் பழமை வாய்ந்த தெப்பக்குளம் உள்ளது. நகரில் பல்வேறு பணிகளுக்கு இந்த தெப்பக்குளம் பயன்பட்டு வருகின்றது. நீண்ட நாட்களாக பயன்படுத்தப்படாததால் பாசியும் குப்பையும் சேர்ந்து இருந்தது. இதை தூய்மைப் படுத்தும் பணியை எல்.என்.டி நிறுவனத்தின் சார்பில் நேற்று மேற்கொள்ளப்பட்டது.*

*எல்.என்.டி. நிறுவனம், நகராட்சி அலுவலர்கள், தீயணைப்புத் துறை ஊழியர்கள் இணைந்து இந்த தூய்மைப்படுத் தும் பணியினை மேற்கொண்டார்கள். தூய்மைப்படுத் தும் பணியினை சிவகங்கை நகர்மன்றத் தலைவர் சி.எம்.துரை ஆனந்த் துவக்கி வைத்தார்.*

*நகராட்சி ஆணையாளர் பொறுப்பு திருமதி பாண்டீஸ்வரி முன்னிலை வகித்தார். தீயணைப்பு அலுவலர் நாகநாதன் தலைமையிலும் நகராட்சி சுகாதார ஆய்வாளர் தினேஷ்குமார் தலைமையிலும் நகராட்சி ஊழியர்கள் எல்.என்.டி. நிறுவன ஊழியர்கள் சுமார் 100க்கும் மேற்பட்ட ஊழியர்கள் தெப்பக்குளத்தை தூய்மைப்படுத்திடும் பணியில் ஈடுபட்டார்கள் . காலையில் துவங்கிய பணி மாலை வரை நடைபெற்றது .*

*இந்த நிகழ்ச்சியில் எல்.என்.டி நிறுவன திட்ட மேலாளர் பிரதாப், கணக்கர் ராஜேஸ்கண்ணன், பாதுகாப்பு அலுவலர் பிரதீப் குமார் கட்டுமானமேலாளர் மார்த்தாண்டகுமார், நகர்மன்ற உறுப்பினர்கள் வீர காளை நாச்சியார், எஸ்.ஜெயகாந்தன், ராமதாஸ், சண்முகநாதன், துப்புரவு ஆய்வாளர் வெங்கடேசன் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# சிங்கார இரத்தினசபாபதி

### ஜூன் 11 (2020)



**தொ.மு.ச. பேரவையில் இணைப் பொதுச்செயலாளர், பொருளாளர் – தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் ஆகிய பொறுப்பு வகித்ததோடு, மின்கழக தொ.மு.ச. தலைவராக – பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்து, மின் வாரிய தொழிலாளர்களுக்காக பாடுபட்டவர்.**

**கழக ஆட்சியில், மின் ஊழியர்களுக்கு முதல்முறையாக ஊதிய உயர்வு – அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் பெற்றுத் தந்ததோடு, ஆயிரக்கணக்கான ஒப்பந்த ஊழியர்களுக்கு பணி நிரந்தரம் பெற்றுத் தந்தார். அ.தி.மு.க. ஆட்சியில் ஊழியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கண்டித்துப் போராட்டங்கள் நடத்தியதோடு, 2.57 சதவீத ஊதிய உயர்வை போராடிப் பெற்றுக் கொடுத்தது என மின்வாரிய ஊழியர்களின் நலன்களுக்காகவும் – உரிமைகளுக்காவும் தொடர்ந்து குரல் கொடுத்தவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் பேராசிரியர் பெருந்தகையின் பேரன்பையும் பாசத்தையும் பெற்றதோடு, தலைமைக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் – மாநாடுகளிலும் மின்கழக தொ.மு.ச.வினரை பெருந்திரளாக பங்கேற்க வைத்து, கழகத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**